**Kanton Bern**
**Canton de Berne**

Gesundheits-, Sozial- und Integrationsdirektion
Gesundheitsamt
Kantonsärztlicher Dienst

சுகாதார-, சமூக- மற்றும் முன்னேற்றும் பகுதி
சுகாதாரத் திணைக்களம்
மாநில வைத்தியசேவை

# தடுப்பூசிக்கு சம்மதித்தல்

**ஒவ்வொரு தடுப்பூசி குறித்த தகவல்களை நீங்கள் பேர்ண் மாநில «பரிந்துரைக்கும் தடுப்பூசிகள் » என்ற பத்திரத்தில் காணலாம்.**

**இங்கே தரப்பட்டுள்ள, மத்திய அமைச்சால் சுகாதாரத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கான செலவை மருத்துவக் காப்புறுதி ஏற்றுக்கொள்ளும் (HPV- தடுப்பூசித் திட்டத்திற்கு சொந்தமாக எதுவும் செலுத்தத் தேவையில்லை அது தவிர்ந்த ஏனையவைகளுக்கு 10% சொந்தமாகச் செலுத்துவது கழிக்கப்படும்)**

ஆண் அல்லது பெண் பாடசாலை வைத்தியர் பாடசாலை வைத்தியப் பரிசோதனைக்காக உங்கள் பிள்ளையின் தடுப்பூசி அட்டையைப் பரிசோதிப்பார். தற்சமயம் ஏதாவது தடுப்பூசிகள் தேவைப்பட்டால், ஆண் அல்லது பெண் பாடசாலை வைத்தியர் **உங்கள் சம்மதத்துடன்** இந்தத் தடுப்பூசிகளை ஏற்றுவார்கள் அல்லது அதை ஏற்றுமாறு உங்களுக்குப் பரிந்துரைப்பார்கள்.

Bern, 2021

| வயது | தடுப்பூசிகள் |
| --- | --- |
| 4-7 வயது<br>* 6 வயது<br>தொடக்கம் | - இளம்பிள்ளைவாதம், தொண்டை அடைப்பான், ஏற்புவலி, கக்குவான் இருமல்<br>- *பூச்சிகளால் பரவும் மூளைக்கொதிப்பு (FSME)<br><br>மீளவும் புதுப்பிக்கும் தடுப்பூசிகள்:<br>- தட்டம்மை, கூவைக்கட்டு, யேர்மன் சின்னமுத்து |
| 11 வயதுக்கு<br>மேலாக | - தொண்டை அடைப்பான், ஏற்புவலி, கக்குவான் இருமல்<br>- ஹெபரைற்றிஸ் B (2 அல்லது 3 முறை)<br>- பக்றீரியா மூளைக்காய்ச்சல் (மெனிங்கோகொக்கென்)<br>- மனித பாப்பிலோமா வைரஸ் (கர்ப்பப்பை வாசல் புற்றுநோய், பிறப்புறுப்பு மருக்கள்) (2 அல். 3 முறை)<br><br>மீளவும் புதுப்பிக்கும் தடுப்பூசிகள்:<br>- இளம்பிள்ளைவாதம்,<br>- தட்டம்மை, கூவைக்கட்டு, யேர்மன் சின்னமுத்து<br>- FSME |

உங்கள் பிள்ளை 11- தொடக்கம் 15-வயதானவர்களாக இருந்து இதுவரை சின்னம்மை நோய் (பொக்களிப்பான்) வராமலிருந்தால், நீங்கள் உங்கள் குடும்பவைத்தியரிடம் தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி குறித்து உரையாடுங்கள்.

**தடுப்பூசி ஏற்றுவதற்கு எதிராக உள்ள பின்வரும் பொதுக் காரணங்களை, தயவுசெய்து நீங்கள் கவனத்திற் கொள்ளுங்கள்:**

- **முன்னைய அனாபிளாற்றிக் எதிர்விளைவுகள் (=கடுமையான ஒவ்வாமை எதிர்விளைவு)**
- **கர்ப்பம்தரித்திருத்தல்**
- **குறைவான எதிர்ப்புச்சக்தி**
- **தற்போதுள்ள, கடுமையான நோய்**

## சம்மதித்தல்

எனது பிள்ளைக்கு, **தடுப்பூசி அட்டையைப் பரிசோதித்தபின்பு தேவைப்படுமாக இருந்தால்**, பின்வரும் தடுப்பூசிகளை ஏற்றவும் (**பொருத்தமானவற்றுக்குப் புள்ளடியிடவும்**):

☐ கீழேயுள்ள தேவைப்படும் அனைத்துத் தடுப்பூசிகள்.

☐ பின்வரும் தடுப்பூசிகள் மட்டும்
- ☐ இளம்பிள்ளைவாதம் / தொண்டை அடைப்பான் / ஏற்புவலி/ கக்குவான் இருமல் (ஒன்றுசேர்ந்த தடுப்பூசிகள்)
- ☐ தட்டம்மை, கூவைக்கட்டு, யேர்மன் சின்னமுத்து (ஒன்றுசேர்ந்த தடுப்பூசிகள்)
- ☐ பக்றீரியா மூளைக்காய்ச்சல் (மெனிங்கோகொக்கென்)
- ☐ ஹெபரைற்றிஸ் B
- ☐ மனித பாப்பிலோமா வைரஸ் (கர்ப்பப்பை வாசல் புற்றுநோய், பிறப்புறுப்பு மருக்கள்)
- ☐ பூச்சிகளால் பரவும் மூளைக்கொதிப்பு (FSME)

அனைத்துத் தடுப்பூசிகளும் ஊசி மருந்தாக ஏற்றப்படும் (பகுதிரீதியாக ஒன்றுசேர்ந்த வடிவில்). ஆண் அல்லது பெண் பாடசாலை வைத்தியர்கள், சிலவேளைகளில் தடுப்பூசியை தாமாக ஏற்றமாட்டார்கள், மாறாக உங்கள் பிள்ளையிடம் தமது பரிந்துரையை எழுத்துவடிவமாகக் கொடுத்துவிடுவார்கள் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்.

பிள்ளையின் பெயர், முதற்பெயர்:

__________________________________________

மருத்துவக் காப்புறுதியின் பெயர் மற்றும் முகவரி:

-------------------------------------------------------------------------------------------

__________________________________________

காப்புறுதியாளரின் இலக்கம்:

__________________________________________

AHV-இலக்கம் (HPV -தடுப்பூசிக்கு மட்டும்):
(AHV = வயோதிப- மற்றும் தங்கியிருப்போர் காப்புறுதி)

__________________________________________

நகரம், திகதி: ______________________________

பெற்றோரின் / வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்கள் கையொப்பம்:

__________________________________________